

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் அமைசசர் இரா.இராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்திகேயன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி. மணி, தாமரைக்கண்ணன், மேயர் ஆ.ராமச்சந்திரன் தொகுதி பொறுப்பாளர்கள். பி.ஏ.ஆர்.இளங்கோவன். ஈ.ஜி.சுகவனம், டாக்டர். விவேக் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

## முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்ட வேளாண் வணிகத் திருவிழாவில்

# 1,57,592 பேர் பயன்; 121 மெட்ரிக் டன் உணவு விற்பனை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!



சென்னை, அக்.1 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் "வேளாண் வணிகத் திருவிழா 2025" 27.09.2025 அன்று தொடங்கி வைக் கப்பட்டு 27.09.2025 மற்றும் 28.09.2025 ஆகிய இரண்டு நாட் கள் சிறப்பாக நடைபெற்றது. இது ஏற்கனவே, 2022-23-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வேளாண் கண் காட்சி மற்றும் கருத்தரங்கு போன்றே இந்த ஆண்டின் இரண் டாவது நிகழ்வாகும்.

உழவர்களால் உற்பத்தி செய்யப் படும் வேளாண் விளை பொருட் கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் உள் ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளை அதிகரித்து உழவர் கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், உணவு பதப்படுத் தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர் கள், பொதுமக்கள், இயற்கை நல ஆர்வலர்கள் என அனைத்துத் தரப் பினரும் ஒருங்கே பயன்பெறும் வகையில் "வேளாண் வணிகத் திரு விழா 2025" அமைந்திருந்தது.

இந்த திருவிழாவில், சங்ககாலம் முதல் தற்காலம் வரை தமிழர்க ளின் வேளாண் வணிகத்தின் பரி ணாம வளர்ச்சி, பனை, தென்னை, ஊட்டச்சத்துமிக்க சிறுதானி யங் கள், மூலிகைப்பயிர்கள், முருங்கை, மஞ்சள், பலா, முந்திரி, நிலக்கடலை போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களின் சிறப்புகள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட் கள் மற்றும் மதிப்புக்கூட்டும் இயந் திரங்கள் குறித்த கருத்து விளக்கக் கண்காட்சி, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்ச ரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், உழவர் நல சேவை மையங்கள், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், பாரம்ப ரிய காய்கறிகள் போன்ற அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், பல் வேறு மதிப்புக் கூட்டும் இயந்திரங் கள், ஏற்றுமதி தொடர்பான விவ ரங்கள் போன்ற அரசின் அனைத்துத் திட்டங்கள் குறித்த மாதிரிகள், விளக்கங்கள் வேளாண் மைஉழவர் நலத்துறை மற்றும் சார் புத்துறைகளால் அமைக்கப்பட்டு விவசாயிகளும், பொதுமக்களும் அவற்றை பார்வையிட்டு விளக்கங் களை ஒரே இடத்தில் விரிவாகப் பெற்றுப் பயனடைந்தனர்.

இவற்றுடன், உணவே மருந்து, நகர வாழ்க்கையில் ஆரோக்கிய உணவு, ஆரோக்கியமான வாழ்க் கைக்கு சரிவிகித உணவு, உணவு பதப்படுத்துதலும் மதிப்புக்கூட்டுத லும், இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை, சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டுதல், உழவர் உற்பத் தியாளர் நிறுவனங்களின் செயல் பாடுகள் மற்றும் வழிகாட்டுதல், உழவர்களுக்கான மின்னணு சந் தைப்படுத்துதல், ஏற்றுமதி வாய்ப் புகள், நன்னெறி வேளாண் நடை முறைகள், வேளாண்மைஉழவர் நலத்துறையின் நான்காண்டு சாத னைகள் போன்ற 12 தலைப்புகளில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் விவசாயிகளும் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்துகொண்டு, கலந்துரையாடி பயன்பெற்றனர்.

இவ் வேளாண் வணிகத்திருவி ழாவில், இருதினங்களில் 15,420 உழவர் பெருமக்கள், 1,42,172 பொதுமக்கள் என 1,57,592 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர். ரூ.2.89 கோடி மதிப்பிலான 121 மெட்ரிக் டன் மதிப்புக்கூட்டப் பட்ட உணவு வகைகள், உடனடி யாக உண்ணும் உணவுகள், மூலிகை உணவுப் பொருட்கள், பாரம்பரிய சிறுதானிய உணவு வகைகள் போன்ற பல்வேறு பொருட்கள் பொதுமக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்பட்டன.

இவை தவிர, அமர்ந்து உண் ணும் வசதியுடன் கூடிய உணவு அரங்கில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தனியார் உணவகங்க ளால் இயக்கப்பட்ட 20 கடைக ளில் விற்பனை செய்யப்பட்ட தேனீர், காபி, பழரசபானங்கள், சூப் வகைகள் உள்ளிட்ட பல்வேறு சுவையான, சத்தான உணவு வகை கள், சிற்றுண்டிகள், சாப்பாடு ஆகி யவற்றை பொதுமக்கள் விரும்பி சுவைத்து மகிழ்ந்தனர் என்பதை உணவு அரங்கில் எப்போதும் பெரு மளவு இருந்த கூட்ட த்தைக் கொண்டு அறிய முடிந்தது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவ னங்கள், பாரம்பரிய உணவு உற் பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறு வனங்கள், உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள், வேளாண் விளைபொருட்கள் மதிப்புக்கூட் டும் இயந்திர உற்பத்தி நிறுவனங் கள் தங்களின் ஏற்றுமதித் தரத்தி லான மதிப்புக்கூட்டப்பட்ட பல் வேறு பொருட்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக காட்சிப்படுத்தி யதுடன் விற்பனையும் செய்யப் பட்டன.

வேளாண் வணிகத்திருவிழாவில் 168 உழவர் உற்பத்தியாளர் நிறு வன அரங்குகள், 25 அரசு அரசுத் துறை கருத்து விளக்கக் கண்காட்சி அரங்குகள், 29 தனியார் நிறுவன அரங்குகள் ஆக மொத்தம் 222 அரங்குகள் மிகச்சிறப்பாக அமைக் கப்பட்டிருந்தன. இவற்றுள் உழ வர் உற்பத்தியாளர் நிறுவனங் களுக்கு இலவசமாக அரங்குகள் வழங்கப்பட்டன.

இவ் வேளாண் வணிகத் திருவி ழாவின் வாயிலாக தமிழ்நாடு முழு வதும் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பல்வேறு வேளாண் விளைபொருட்கள், மதிப்புக்கூட் டப்பட்ட பொருட்கள், சென்னை உள்ளிட்ட பெருநகர மக்களுக்கு கிடைத்ததுடன், அவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட் டது. மேலும், விவசாயிகள், வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்கும் தளமாகவும் இவ் வேளாளாண் வணிகத்திருவிழா அமைந்தது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், சோமியம்பாளையம் ஊராட்சி அருகில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக்கழக விரிவாக்கத்திற்காக 1982 ஆம் ஆண்டு சுமார் 950 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. நிலம் கொடுத்த பயனாளிகளுக்கு உரிய இழப்பீடு தொகை அல்லது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அரசு வேலை முழுமையாக கிடைக்கப் பெறக்கோரி மனுவினை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியனிடம் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கி பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டுமென கோரிக்கை வைத்தார். உடன் பெரியநாயக்கன் பாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் தாமு (எ) தாமோதரன் உள்ளார்.

## கொளத்தூர் — திரு.வி.க.நகர் தொகுதியில்

# சி.எம்.டி.ஏ. சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.1-

சென்னை, தாளமுத்து நடராஜன் மாளிகையிலுள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட் டரங்கில் நேற்று முன்தினம் (29.09.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச் சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவ ருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் கொளத்தூர் மற்றும் திரு. வி.க. நகர் சட்டமன்ற தொகுதி யில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சி பணிக ளின் முன்னேற்றம் குறித் தும், தற்போதிய நிலை குறித் தும் மற்றும் முடியும் தருவாயிலுள்ள பணிகளை விரைவில் மக்கள் பயன்பாட் டிற்கு கொண்டுவருவது குறித்தும் துறைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் உரி மையாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென் னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சி.எம். டி.ஏ. முதன்மை செயல் அலு வலர் அ.சிவஞானம், நகர் ஊரமைப்பு இயக்கக இயக்கு நரும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி கண்காணிப்பு அலு வலருமான பா.கணேசன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமை திட்ட அமைப்பாளர்கள் எஸ். ருத்ரமூர்த்தி, ந.ரவிக்குமார், தலைமை பொறியாளர்கள் (சிஎம்டிஏ) மகாவிஷ்ணு, (மாநகராட்சி) திருமதி. ராஜேஸ்வரி, (சென்னை குடிநீர்) ராதாகிருஷ்ணன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (இயக் கம்) நெடுஞ்செழியன், மின் சார வாரியம், மாநகராட்சி ஆகியோர் உடனிருந்தனர்.

# அம்பத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, அக். 1-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன் னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன் றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுத கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 222 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (29.09.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 88, தேவா நகர் மெயின் ரோடு, கொடிக்கம் பம் அருகில். 2) வட்டம் 90, 15 வது தெரு, பாடி, புதுநகர் மெயின் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத் தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ் நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொ ழியை ஏற்று பொதுமக்க ளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம். சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர். ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர் ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயி ரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ண மூர்த்தி அம்பத் தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனி வாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ. ராதா கிருஷ்ணன், த. கண்ண பிரான், எம்.கமல் எம்.சி, மு. சண்முகம், ஆ.சுந் தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால், பி.செந் தில். ஒருங்கிணைப்பாளர் கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத் குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் தென்மேற்கு மாவட்ட தலைவர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - **வே. அரிகரன்** 96, ரெட்டிக்குப்பம் ரோடு, விக்கிரவாண்டி அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம் - 605652, விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - சா. ராமன் மாரியம்மன் கோவில் தெரு, காங்கேயனூர் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - தா. பூபதி 124/178, நேதாஜி தெரு, என். ஜி.ஜி.ஓ.நகர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. ரமேஷ் பள்ளிக்கூடத் தெரு, சிறுவாக்கூர், கல்பட்டு அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) என்.பி.ஆர். சிவகுமார் பிள்ளை மேற்கு தெரு, சி. மெய்யூர் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) எஸ். பிரசாந்த் 1/92, தெய்வீகன் தெரு, மணம்பூண்டி அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) இர. கார்த்திகேயன் 228, காமராஜர் ரோடு, அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) டி.கே. செந்தில் குளத்து தெரு, ஆற்காடு, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) க. சித்தானந்தன் 256/4, 4வது தெரு, சித்தலிங்கமடம் குடியிருப்பு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 7) ஏ. சிவராஜ் மாரியம்மன் கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பழப்பட்டு அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 8) அ. அருள் முருகன் 2, ஆசாரி தெரு, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் மு. பாலகுரு அவர்களுக்கு பதிலாக ஏற்கனவே தலைவராக நியமிக்கப்பட்ட **என்.வடிவேல்**, (7/8, சாரதாபுரம், கெனால் பேங்க் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004.) அவர்கள் சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராகவும், **ஆ. ராஜேந்திரன்,** (24, ஆர்-பிளாக், பல்லக்குமான்யம், மந்தைவெளி, சென்னை - 28.) அவர்கள் தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-09-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி




நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் (VETRI [Vibrant Education Targeting Reputed Institutions] Palligal) திட்டத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு. அருணா கலந்துகொண்டு, மாணவ, மாணவியர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். உடன் மேயர் திருமதி. திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர்.கே.நிர்மலா மற்றும் கல்லூரி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.